Sl. No. : 20002441

# EOGT

பதிவு எண் | | | | | | | | |

## 2013

# பொதுத் தமிழும் பொது அறிவும்
# (SSLC Standard)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

---

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் வினாத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர், வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீலம் அல்லது கருமை நிற பந்துமுனைப் பேனாவினால் நீங்கள் எழுத வேண்டும். தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [A], [B], [C] மற்றும் [D] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் [B] என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [C] [D]
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுபபினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
13. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

| ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET |
|---|

SEAL

A [Turn over

www.tnpsctamil.info

1. அயோத்திதாசர் 'ஆதிவேதம்' என்னும் நூலை எழுத எந்நூலைச் சான்றாகக் கொள்ளவில்லை?

(A) நன்னூல் விளக்கம்

(B) தொன்னூல் விளக்கம்

(C) வீரசோழியம்

(D) மச்சமுனிவர் ஞானம்

2. தவறான தொடரைக் கண்டுபிடி :

(A) ஆயிரம் யானைகளை வென்றவனைப் பாடுவது – பரணி

(B) மூவேந்தர்களைப் பற்றிய செய்திகள் முத்தொள்ளாயிரம்

(C) பதினெட்டு உறுப்புகளால் ஆனது – கலம்பகம்

(D) ஒரே சொல்லைத் திரும்பத் திரும்பப் பாடுவது – அந்தாதி

3. அணியைச் சுட்டுக :

"அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று"

(A) ஏகதேச உருவக அணி

(B) எடுத்துக்காட்டு உவமை அணி

(C) வேற்றுமை அணி

(D) இல்பொருள் உவமை அணி



www.tnpsctamil.info

4. ‘நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா’ என்று பாராட்டப்பட்டவர் யார்?

(A) பாரதிதாசன்

(B) கண்ணதாசன்

(C) பாரதியார்

(D) வாணிதாசன்

5. உரிய விடையைத் தேர்க :

அகராதி என்னும் சொல் முதன்முதலாக இடம் பெற்றுள்ள நூல் :

(A) திருமந்திரம்

(B) சதுரகராதி

(C) தமிழ் அகராதி

(D) தமிழ் – தமிழ் அகர முதலி

6. விடை தேர்க :

பெண்களுக்குக் கல்வியும், சொத்துரிமையும் தரப்பட வேண்டும் என்று மேடைகளில் பேசியும், இதழ்களில் எழுதியும் வந்தவர்

(A) பெரியார்

(B) பாரதியார்

(C) பாரதிதாசன்

(D) வாணிதாசன்

7. “எக்கோளில் கந்தகம் இருப்பதாக இன்றைய அறிவியல் ஆய்வு கூறுகிறது”?

(A) சனி

(B) புதன்

(C) வியாழன்

(D) வெள்ளி



www.tnpsctamil.info

8. சரியான விடையைத் தேர்க.

தற்காலத்தில் மதுரை என அழைக்கப்படும் ஊர் பழங்காலக் கல்வெட்டுகளில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) மதுர

(B) மதுரா

(C) மதிரை

(D) மதுரை

9. இயற்பெயரோடு புனைப்பெயரைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | துரைராசு | 1. | மயன் |
| (b) | வ.செ. குழந்தைசாமி | 2. | நகுலன் |
| (c) | டி.கே. துரைசுவாமி | 3. | முடியரசன் |
| (d) | நா. சுப்பிரமணியம் | 4. | குலோத்துங்கன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

10. வாயில் ஊறேறு நுகர்வே வேட்கை

பற்றேபவமே தோற்றம் வினைப்பயன் – இப்பாடலடியில் like எனும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்

(A) பற்று

(B) வேட்கை

(C) நுகர்வு

(D) தோற்றம்



www.tnpsctamil.info

11. வள்ளலார் பதிப்பித்த நூல் எது?

(A) திருச்சதகம்

(B) அறப்பளீசுர சதகம்

(C) தொண்டமண்டல சதகம்

(D) குமரேச சதகம்

12. பொருந்தா இணையைக் கண்டறிக :

| | கவிதை வரி | | கவிஞர் |
|---|---|---|---|
| (A) | 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது' | – | நாமக்கல் கவிஞர் |
| (B) | 'நமக்குத் தொழில் கவிதை' | – | பாரதியார் |
| (C) | 'உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே' | – | பாரதிதாசன் |
| (D) | 'வெறுங்கை என்பது மூடத்தனம் விரல்கள் பத்தும் மூலதனம்' | – | கவிமணி |

13. "................

கருமமே கண்ணாயி னார்" – என்ற அடியை ஈற்றடியாகக் கொண்ட நீதி நூலின் பெயர்

(A) நாலடியார்

(B) மூதுரை

(C) நீதிநெறி விளக்கம்

(D) ஆசாரக்கோவை

14. நீடூழி வாழ்க – என்பது

(A) விழைவுத் தொடர்

(B) வினாத் தொடர்

(C) உணர்ச்சித் தொடர்

(D) செய்தித் தொடர்

15. கீழ்க்காண்பனவற்றுள் எத்தொடர் பிறமொழிச் சொல் கலவாதது?

(A) ஆசிரியர் அனுமதி பெற்று வேலன் விடுப்பு எடுத்தான்

(B) ஒப்பனை செய்து கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி

(C) அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச்சிறந்த நிபுணர்

(D) அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது



www.tnpsctamil.info

16. “இது செய்வாயா”? என்பதற்கு நீயே செய் என்று மொழியும் விடை

(A) உற்றது உரைத்தல்

(B) உறுவது கூறல்

(C) ஏவல் விடை

(D) வினா எதிர் வினாதல் விடை

17. ஐந்திணைகளில் எத்திணையிலும் இடம் பெறாத <u>சிறு பொழுது</u> எது?

(A) யாமம்

(B) மாலை

(C) காலை

(D) எற்பாடு

18. உலகின் எட்டாவது அதிசயம் என்று பாராட்டப்படுபவர்

(A) ஆங்சாங்சுகி

(B) மேரிகியூரி

(C) கெலன் கெல்லர்

(D) சடகோ சசாகி

19. “தான் நேரில் கண்டும் கேட்டும் அறிந்துள்ள செய்திகளைச் சித்திரகுப்தனைப் போல் ஒன்று விடாமல் குறித்து வைத்துள்ளவர்” என ஆனந்தரங்கனைப் பாராட்டியவர்

(A) பரிதிமாற் கலைஞர்

(B) மறைமலையடிகள்

(C) வ.வே.சு.

(D) பாவாணர்



www.tnpsctamil.info

20. சீவகசிந்தாமணியின் உட்பிரிவுக்கு என்ன பெயர்?

(A) காதை

(B) இயல்

(C) இலம்பகம்

(D) காண்டம்

21. "செறுநரைக் காணின் சுமக்க இறுவரை

காணின் கிழக்காம் தலை"

இக்குறட்பாவில் அடிக்கோடு இடப்பட்ட சொல்லுக்குச் சரியான ஆங்கிலச் சொல்லைத் தேர்க :

(A) FOE

(B) FOB

(C) FOG

(D) FOP

22. "நான் தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன்" – என்று கூறியவர்

(A) மு. வரதராசன்

(B) டி.கே. சிதம்பரம்

(C) திரு.வி. கலியாணசுந்தரம்

(D) ரா.பி. சேதுப்பிள்ளை

23. காந்தியடிகள் பள்ளிப் பருவத்தில் படித்த நாடக நூல்

(A) சிரவண பிதுர்பத்தி

(B) மனோன்மணீயம்

(C) சிலப்பதிகாரம்

(D) அரிச்சந்திர புராணம்

24. ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே – எனப் பாடியவர்

(A) சுந்தரர்

(B) திருநாவுக்கரசர்

(C) ஞான சம்பந்தர்

(D) மாணிக்கவாசகர்



www.tnpsctamil.info

25. அடிகள் தோறும் நாற்சீர்கள் கொண்ட அளவடிகளாக வருவது

(A) நேரிசை ஆசிரியப்பா

(B) இணைகுறள் ஆசிரியப்பா

(C) நிலைமண்டில ஆசிரியப்பா

(D) அடிமறிமண்டில ஆசிரியப்பா

26. உயிர்த்தொடர் குற்றியலுகரத்தைச் சாராதது

(A) வரகு

(B) வரவு

(C) கடுகு

(D) மிளகு

27. ஆண்பாற் கூற்றும் பெண்பாற் கூற்றும் இடம் பெற்ற திணைகள்

(A) வெட்சி, காஞ்சி

(B) வெட்சி, கரந்தை

(C) நொச்சி, உழிஞை

(D) கைக்கிளை, பெருந்திணை

28. "தென்னம் பொருப்பின் தலைவ வாழி" என்னும் அடியில் தென்னம் பொருப்பு குறிப்பது

(A) குடகு மலை

(B) பொதிகை மலை

(C) ஜவ்வாது மலை

(D) ஆனை மலை

29. 'உச்சிமேற் புலவர் கொள்' என்ற அடைமொழியால் குறிக்கப்படுபவர்

I. தொல்காப்பியர்

II. இவர் காப்பியம் படைத்தவர்

III. இவர் ஒரு உரையாசிரியர்

IV. நச்சினார்க்கினியர்

(A) I–ம், II–ம் சரியானவை

(B) I–ம், III–ம் சரியானவை

(C) II, III, IV மூன்றுமே சரி

(D) III–ம், IV–ம் சரியானவை



www.tnpsctamil.info

30. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருள் இணை தருக

| | கலை | | கழை |
|---|---|---|---|
| (A) | கலைத்தல் | – | மரம் |
| (B) | கவின்கலை | – | மூங்கில் |
| (C) | நீக்குதல் | – | கழைக்கூத்து |
| (D) | ஒப்பனை | – | தழைத்தல் |

31. பெயர்ச்சொல்லின் வகையறிக : "இகலவர்"

(A) வினையாலணையும் பெயர்

(B) குறிப்பு வினையாலணையும் பெயர்

(C) காரணச் சிறப்புப் பெயர்

(D) உவமையாகு பெயர்

32. 'The light of Asia' என்ற ஆங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்

(A) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

(B) நாமக்கல் கவிஞர்

(C) உடுமலை நாராயண கவி

(D) மருதகாசி

33. மலையமான் என்ற மன்னன் மக்களை யானையின் கால் கீழிட்டுக் கொல்ல முற்பட்டபொழுது, தடுத்து நிறுத்திய புலவர்

(A) கபிலர்

(B) கோவூர்க்கிழார்

(C) மோசிகீரனார்

(D) ஔவையார்



www.tnpsctamil.info

34. நாவுக்கரசர் நல்கிய நன்னெறி என்ன?

(A) மகன்மை நெறி

(B) தொண்டு நெறி

(C) தோழமை நெறி

(D) சமத்துவ நெறி

35. மணிமேகலையின் தோழி

(A) காய சண்டிகை

(B) நீலி

(C) ஐயை

(D) சுதமதி

36. தேவநேயப் பாவாணர் தமிழன்னைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இறுதியாக சொற்பொழிவு நிகழ்த்திய இடம் எது?

(A) சென்னை

(B) மதுரை

(C) கோவை

(D) தஞ்சை

37. மேடைப் பேச்சின் கூறுகள் எத்தனை?

(A) 3

(B) 4

(C) 1

(D) 2



www.tnpsctamil.info

38. கீழுள்ள நூல் பட்டியலில் மாறியிருக்கும் நூல் எது?

(A) ஏலாதி

(B) திருமந்திரம்

(C) திருவாசகம்

(D) திருத்தொண்டத்தொகை

39. பத்துப்பாட்டிலும், பன்னிரு திருமுறைகளிலும் இடம் பெறுவது

(A) தேவாரம்

(B) திருவிளையாடற்புராணம்

(C) திருமுருகாற்றுப்படை

(D) குறிஞ்சிப்பாட்டு

40. சந்திப்பிழை இல்லாதத் தொடரைக் கண்டறிக :

(A) ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்

(B) ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார் அம்பேத்கர்

(C) இலட்சியக் கனவுகளை அறிவுத்திறத்தினால் உறுதிப்படுத்தியவர் அம்பேத்கர்

(D) சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக தன்னை அர்பணித்துக் கொண்டவர் அம்பேத்கர்

41. பின்வரும் நூல்களுள் மாறுபட்டதை தேர்க :

(A) ஏலாதி

(B) பழமொழி

(C) சிறுபஞ்சமூலம்

(D) திரிகடுகம்

42. பிரித்தெழுதுக : கரியன்

(A) கரு + அன்

(B) கருமை + அன்

(C) கரிய + அன்

(D) கரி + அன்



www.tnpsctamil.info

43. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இடுகுறிப் பொதுப்பெயர் | 1. | மரங்கொத்தி |
| (b) | இடுகுறிப் சிறப்புப்பெயர் | 2. | பறவை |
| (c) | காரணப் பொதுப்பெயர் | 3. | காடு |
| (d) | காரணச் சிறப்புப்பெயர் | 4. | பனை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

44. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) மேதி

(B) எண்கு

(C) கேழல்

(D) மஞ்ஞை

45. சரியான ஈற்றடியைத் தேர்க :

"ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்கு

.............................. "

(A) பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து

(B) பொன்றுந் துணையும் புகழ்

(C) தகுதியான் வென்று விடல்

(D) அறனல்ல செய்யாமை நன்று



www.tnpsctamil.info

46. பொருத்தமில்லாத் தொடரை கண்டறிக :

(A) தமிழ்த்தென்றல் திரு.வி. கல்யாணசுந்தரனார்

(B) தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத ஐயர்

(C) தமிழவேல் உமாமகேஸ்வரனார்

(D) நூலகத் தந்தை அறிஞர் அண்ணா

47. பொருத்துக :

| | பாடலின் தொடக்கம் | | பாடிய புலவர் |
|---|---|---|---|
| (a) | பொன்னும் துகிரும் மன்னிய | 1. | மிளைகிழான் நல்வேட்டனார் |
| (b) | கண்வனப்புக் கண்ணோட்டம் | 2. | மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் |
| (c) | அரிகால் மாறிய அங்கண் அகல்வயல் | 3. | காரியாசான் |
| (d) | தென்கடல் வளாகம் பொதுமையின்றி | 4. | கண்ணகனார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

48. இனத்தில் சேராத ஒன்றைச் சுட்டுக :

(A) வங்கம்

(B) திமில்

(C) பெளவம்

(D) கலம்



www.tnpsctamil.info

49. ‘திருமுருகாற்றுப்படை’ சைவத் திருமுறைகளில் எத்தனையாவது திருமுறை?

(A) எட்டாம் திருமுறை

(B) பத்தாம் திருமுறை

(C) ஐந்தாம் திருமுறை

(D) பதினோராம் திருமுறை

50. பதிற்றுப்பத்து நூலில் கிடைக்கப் பெறாதவை

(A) முதற் பத்தும் மூன்றாம் பத்தும்

(B) ஐந்தாம் பத்தும் பத்தாம் பத்தும்

(C) இரண்டாம் பத்தும் எட்டாம் பத்தும்

(D) முதற் பத்தும் பத்தாம் பத்தும்

51. கீழ்க் காண்பவர்களுள் அமைச்சராக இருந்து அருந்தமிழ் வளர்த்தவர்

(A) பொய்யாமொழித் தேவர்

(B) திருத்தக்க தேவர்

(C) அருண்மொழித் தேவர்

(D) பாண்டித்துரை தேவர்

52. ‘புள்ளுறு புன்கண் தீர்த்தோன்’ என்ற தொடரில் ‘தீர்த்தோன்’ என்ற சொல் யாரைக் குறிக்கிறது?

(A) சிபிச் சக்கரவர்த்தி

(B) மனுநீதிச் சோழன்

(C) கரிகாற் சோழன்

(D) இராசஇராச சோழன்

53. “ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி”
எனக் கூறும் நூலின் பெயர் யாது?

(A) கலிங்கத்துப் பரணி

(B) திராவிடத்துப் பரணி

(C) பன்னிரு பாட்டியல்

(D) முத்தொள்ளாயிரம்



www.tnpsctamil.info

54. உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்க பெருஞ்சித்திரனார் வெளியிட்ட இதழ்களுள் ஒன்று

(A) தென்றல்

(B) தென்மொழி

(C) குயில்

(D) மணிக்கொடி

55. மாற்றரசன் நாட்டுக்குள் புகுந்து மதிலைக் கைப்பற்றுவது

(A) உழிஞை

(B) நொச்சி

(C) தும்பை

(D) வாகை

56. இவற்றுள் எது அளவை ஆகுபெயரன்று?

(A) உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்

(B) இரண்டு லிட்டர் கொடு

(C) மூன்று கிலோ அரிசி கொடு

(D) ஐந்து மீட்டர் கொடு

57. விடைத் தேர்க :

I. சிறந்த நூல் எது? அந்நூலின் ஆசிரியர் யார்?

II. அதுவா சிறந்த நூல்? அவரோ இயற்றினார்?

III. எ,யா என்னும் வினாவெழுத்துகள் சொல்லின் முதலில் நின்று வினாப் பொருளைத் தரும்.

IV. ஆ,ஓ என்னும் வினாவெழுத்து சொல்லின் ஈற்றில் நின்று வினாப் பொருளைத் தரும்.

(A) I மற்றும் II தவறு III மற்றும் IV சரி

(B) I சரி II தவறு III மற்றும் IV சரி

(C) I மற்றும் II சரி III தவறு IV சரி

(D) I, II, III, IV அனைத்தும் சரி



www.tnpsctamil.info

58. ‘நல்கிய’ என்னும் பகுபதத்தின் இடைநிலை

(A) க்

(B) இ

(C) இன்

(D) இய

59. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | எஃஃகு | 1. | செய்யுளிசை யளபெடை |
| (b) | கெழீஇ | 2. | இன்னிசையளபெடை |
| (c) | தொழா அர் | 3. | சொல்லிசையளபெடை |
| (d) | கெடுப்பதூஉம். | 4. | ஒற்றளபெடை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

60. ‘முக்கூடற் பள்ளு’ நூலில் இடம்பெறாத ஆறு

(A) தாமிரபரணியாறு

(B) கோதண்டராம ஆறு

(C) தண்பொருநை ஆறு

(D) சிற்றாறு



www.tnpsctamil.info

61. மயங்கொலிப் பிழையற்ற வாக்கியம் எது?

(A) பொருத்தருலுதல் வேண்டும் அரசே !

(B) பொறுத்தறுளுதல் வேண்டும் அறசே !

(C) பொறுத்தருளுதல் வேண்டும் அரசே !

(D) பொறுத்தறுழுதல் வேண்டும் அரைசே !

62. 'DRAVIDIAN FEDERATION' என்னும் ஆங்கில இதழை நடத்திய தமிழறிஞர்

(A) சி. இலக்குவனார்

(B) ஜே.எம். நல்லாசாமிப்பிள்ளை

(C) மறைமலையடிகள்

(D) திரு. வி. கல்யாணசுந்தரனார்

63. 'படிப்பித்தார்' என்ற சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.

(A) படித்த

(B) படிப்பி

(C) படித்தல்

(D) படி

64. "வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே" என்று பாடியவர்

(A) மாறோக்கத்து நப்பசலையார்

(B) மோசிகீரனார்

(C) மதுரை பூதனிளநாகனார்

(D) கண்ணகனார்

65. விடை தேர்க :

"தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்" என்று கூறியவர் யார்?

(A) மறைமலையடிகள்

(B) தேவநேயப் பாவாணர்

(C) பரிதிமாற்கலைஞர்

(D) பெருஞ்சித்திரனார்



www.tnpsctamil.info

66. உவம உருபு இல்லாத் தொடர் எது?

(A) கொக்கொக்க கூம்பும் பருவத்து

(B) வளவரை வல்லைக் கெடும்

(C) வேய்புரை தோள்

(D) முழவு உறழ் தடக்கை

67. தமிழகத்தின் 'வேர்ட்ஸ் வொர்த்' எனப் புகழப்படும் கவிஞர் யார்?

(A) பாரதிதாசன்

(B) கண்ணதாசன்

(C) சுப்புரத்தினதாசன்

(D) வாணிதாசன்

68. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி

(A) இராணி மங்கம்மாள்

(B) வேலு நாச்சியார்

(C) இராணி பத்மினி

(D) இராணி லஷ்மிபாய்

69. உணவுப் பொருளாக நெல் பயிரிடப்பெற்ற இரு திணைகள்

(A) குறிஞ்சி, மருதம்

(B) முல்லை, மருதம்

(C) நெய்தல், மருதம்

(D) குறிஞ்சி, முல்லை



www.tnpsctamil.info

70. சிலையின் முன்புறம் மட்டும் தெரியுமாறு சுவர்களில் வடிப்பது

(A) உண்மைச் சிற்பம்

(B) முழுச் சிற்பம்

(C) புடைப்புச் சிற்பம்

(D) எதுவும் இல்லை

71. மடங்களிலே மறைந்து கிடந்த தமிழை மக்கள் மடியிலே தவழச் செய்தவர்

(A) மறைமலையடிகள்

(B) குன்றக்குடி அடிகளார்

(C) உ.வே. சாமிநாத ஐயர்

(D) பரிதிமாற் கலைஞர்

72. பொருத்துக :

| | நூல்கள் | | இயற்றியவர் |
|---|---|---|---|
| (a) | பொதுமை வேட்டல் | 1. | இராமலிங்க அடிகளார் |
| (b) | சீவகாருண்ய ஒழுக்கம் | 2. | தாயுமானவர் |
| (c) | தொன்னூல் விளக்கம் | 3. | திரு.வி.க. |
| (d) | ஆனந்த களிப்பு | 4. | வீரமாமுனிவர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

73. கம்பர் பிறந்த ஊர்

(A) தேரழுந்தூர்

(B) திருவாதவூர்

(C) திருநாவலூர்

(D) திருக்காவலூர்



www.tnpsctamil.info

74. “ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமேயில்லை” – என்ற பாடலைப் பாடியவர்

(A) கண்ணதாசன்

(B) உடுமலை நாராயண கவி

(C) மருத காசி

(D) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

75. ‘பதினாறு செல்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி; அதுவே நம் தமிழ்மொழி’ எனக் கூறியவர்

(A) மறைமலையடிகள்

(B) உ.வே. சாமிநாத ஐயர்.

(C) பாவாணர்

(D) பரிதிமாற்கலைஞர்

76. கயல்விழி என்பதன் இலக்கணக் குறிப்பு

(A) வேற்றுமைத் தொகை

(B) உவமைத் தொகை

(C) பண்புத் தொகை

(D) உம்மைத் தொகை

77. மாணிக்கவாசகர் எந்த பாண்டிய மன்னரிடம் பணியாற்றினார்?

(A) குலசேகர பாண்டியன்

(B) சுந்தர பாண்டியன்

(C) அரிமர்த்தன பாண்டியன்

(D) வரகுண பாண்டியன்

78. பொங்கல் உண்டோம் என்பது

(A) இடவாகு பெயர்

(B) சினையாகு பெயர்

(C) தொழிலாகு பெயர்

(D) பொருளாகு பெயர்



www.tnpsctamil.info

79. ‘தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை’ என முழங்கியவர்

(A) பாரதியார்

(B) கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

(C) பாரதிதாசன்

(D) நாமக்கல் கவிஞர்

80. பின்வரும் செய்யுள் அடிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஓசைகளுள் பொருத்தமானது எதுவெனக் கண்டறிக :

(A) பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய – செப்பல்

(B) ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம் – அகவல்

(C) போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை – துள்ளல்

(D) உலகம் யாவையும் தாமுள வாக்கலும் – தூங்கல்

81. “The Ocean of Wisdom” – என்ற ஆங்கில இதழின் ஆசிரியர்

(A) ஜி.யு. போப்

(B) டாக்டர் கால்டுவெல்

(C) மறைமலையடிகள்

(D) வீரமாமுனிவர்

82. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | எதிரூன்றல் | 1. | வஞ்சி |
| (b) | அதிரப்பொருவது | 2. | நொச்சி |
| (c) | வட்கார் மேற்செல்வது | 3. | தும்பை |
| (d) | எயில் காத்தல் | 4. | காஞ்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |



www.tnpsctamil.info

83. 'சலவரைச் சாரா விடுதல் இனிதே'

சலவர் – யாரைக் குறிக்கிறது?

(A) திருடர்

(B) வஞ்சகர்

(C) பொய்யர்

(D) செல்வர்

84. 'டைஸ்' என்னும் இலத்தீன் சொல்லின் பொருள்

(A) மாதம்

(B) நாள்

(C) வாரம்

(D) ஆண்டு

85. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | உவமைக் கவிஞர் | 1. | பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் |
| (b) | காந்தியக் கவிஞர் | 2. | சுரதா |
| (c) | புரட்சிக் கவிஞர் | 3. | நாமக்கல் கவிஞர் |
| (d) | மக்கள் கவிஞர் | 4. | பாரதிதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

86. "கல்விக்கோர் கம்பன் போலும்

கவிதைக்கோர் பரணர் போலும்" – என்று பாடியவர்

(A) கண்ணதாசன்

(B) நாமக்கல் இராமலிங்கனார்

(C) சுரதா

(D) பாரதியார்



[Turn over

www.tnpsctamil.info

87. இவற்றுள் முற்றெச்சத்தை எடுத்து எழுதுக :

(A) கண்ணன் உறங்கினான் விழித்தான்

(B) கண்ணன் விழித்து எழுந்தான்

(C) கண்ணன் எழுந்து படித்தான்

(D) கண்ணன் படித்து முடித்தான்

88. பொருத்துக :

| | நோய் | | தீர்க்கும் மூலிகைகள் |
|---|---|---|---|
| (a) | மார்புச்சளி | 1. | கீழா நெல்லி |
| (b) | மஞ்சட்காமாலை | 2. | அகத்திக்கீரை |
| (c) | இளைப்பிருமல் | 3. | துளசி |
| (d) | பல்சார்ந்த நோய் | 4. | தூதுவளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

89. சொற்களை வரிசைப்படுத்தி மறைந்த பழமொழியினைக் கண்டறிக.

(A) குப்பை துலங்க மேனி மேனி

(B) மேனி குப்பை துலங்க மேனி

(C) மேனி துலங்க குப்பை மேனி

(D) துலங்க மேனி குப்பை மேனி

90. "நாயகன் போர்க்குகன் எனும் நாமத்தான்"

அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான இலக்கணக் குறிப்பைக் கண்டறிக

(A) உவமைத்தொகை

(B) 5–ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

(C) 2–ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

(D) வினையாலணையும் பெயர்



www.tnpsctamil.info

91. பின்வரும் இலக்கணக் குறிப்புகளுள் இனத்தில் சேராத ஒன்றைக் குறிப்பிடுக :

(A) அரங்கம்

(B) மஞ்ஞை

(C) சங்கு

(D) வாழ்க்கை

92. சிறப்புப் பாயிரம் பாடத் தகுதியற்றவர்

(A) தன் ஆசான்

(B) உடன் பயின்றான்

(C) வழிபடுவோன்

(D) தன் மாணவன்

93. 'SUCCESSION ACT' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்

(A) வாரிசுரிமைச் சட்டம்

(B) உரிமைச் சட்டம்

(C) சொத்துரிமைச் சட்டம்

(D) மேற்கூறிய எதுவும் இல்லை

94. மருதத்திணைக்குப் பொருந்தாதது

(A) நாரை

(B) காட்டுக்கோழி

(C) நீர்க்கோழி

(D) அன்னம்

95. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல் :

(A) நீர்வழிப்படூஉம் ஆருயிர் முறைவழிப்படூஉம் புணைபோல்

(B) ஆருயிர் முறைவழிப்படூஉம் நீர்வழிப்படூஉம் புணைபோல்

(C) முறைவழிப்படூஉம் ஆருயிர் புணைபோல் நீர்வழிப்படூஉம்

(D) நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப்படூஉம்



www.tnpsctamil.info

96. "சீர்திருத்தக் கருத்துக்களின் செல்வக்களஞ்சியம்" – என்று புகழப்படுவது

(A) சிலப்பதிகாரம்

(B) சீவகசிந்தாமணி

(C) வளையாபதி

(D) மணிமேகலை

97. கீழுள்ள நூற்பட்டியலில் கம்பர் எழுதிடாத நூலின் பெயர் என்ன?

(A) சடகோபர் அந்தாதி

(B) ஏரெழுபது

(C) திணைமொழி ஐம்பது

(D) சிலையெழுபது

98. "செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் ஆறும் தருவது வினையே" – இதில் 'வினை' என்னும் சொல் குறிப்பது

(A) தெரிநிலை வினைமுற்று

(B) குறிப்பு வினைமுற்று

(C) குறிப்புப் பெயரெச்சம்

(D) வினைமுற்று

99. 'பெரும்பொழுது' என்பது

(A) ஒரு நாளின் ஆறு கூறுகள்

(B) ஒரு வாரத்தின் ஆறு கூறுகள்

(C) ஓராண்டின் ஆறு கூறுகள்

(D) ஒரு பருவத்தின் ஆறு கூறுகள்

100. பொருந்தா இணையைக் கண்டறிக

(A) கலி – சனி

(B) திணை – ஒழுக்கம்

(C) கணை – அம்பு

(D) முன்னாள் – மூன்று நாள்



www.tnpsctamil.info